1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதென நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நம்பிக்கை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக் கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 38 ஆம் பந்தியின் பிரகாரம், நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது நிறுவனத்திற்கு தொடர்ந்து இயங்கும் இயலுமை தொடர்பான மதிப்பீடு ஒண்டு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், குறிப்பிட்ட அளவு சந்தேகம் ஏற்படக்கூடிய சம்பவங்கள் அல்லது நிலைமைகளுக்கு தொடர்புடைய போதிய அளவு நிச்சயமற்ற தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு இருந்த போதிலும் புகை பரிசோதனை நம்பிக்கை நிதியத்தை களைத்து மூடுவதற்கு அமைச்சரவை தீர்மானம், சுற்று நிருபம் மற்றும் அதிகார சட்டத்தின் ஊடாக 2017 ஆம் வருடம் முதல் 04 சந்தர்ப்பங்களின் போது அறிவிக்கப்பட்டு இருந்த போதிலும் அது நிதிக்கூற்றினுள் வெளிப்படுத்தப்படாமல் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் ஒன்றாக	இது தொடர்பாக இணக்கப் பாடொன்றுக்கு முனைந்து மேலும் நிதியத்தை கொண்டு நடத்துதல் சம்பந்தமாக அமைச்சரவைக்கு 2023.01.31 ஆம் திகதி அமைச்சரவை பத்திரம் ஒன்று முன்வைப்பதற்கு போக்குவரத்து அமைச்சி நடவடிக்கை எடுத்திருந்தது. இதன்போது நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் 2023.03.14 ஆம் திகதிய அவதானிப்புக்களை கருத்தில் கொண்டு 2023.03.20 அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் மேலதிக செயலாளர்கள் மட்டத்திலான 05 உத்தியோகத்தர்களின் பங்களிப்புடனான குழு ஒன்று நியமிக்கப்படுவதற்கு நியமிக்கப்பட்டு பரிந்துரைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. 2023.06.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞாபனத்தின் ஊடாக, நிதியத்தின் தொடர்ச்சியான தேவைப்பாடுகள் சம்பந்தமாக விடயங்கள் குறிப்பிடப்பட்டு	நிதியத்தை கலைத்து மூடுவதற்கு அமைச்சரவையின் தீர்மானம், சுற்று நிருபம் மற்றும் அதிகாற சட்டத்தின் ஊடாக 2017 ஆம் வருடத்தில் இருந்து 04 சந்தர்ப்பங்களின் போது அறிவிக்கப்பட்டதுடன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதி க்கூற்று தயாரிக்கப்படும் போது நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் தொடர்பாக குறிப்பிடும் போது அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருத்தல்.

	கருதப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது.	நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரல் அமைச்சு மற்றும் தொடர்புடைய அமைச்சு நிவதியத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் தொடர்ச்சியாக பேணிக் கொண்டு வருவதற்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	
(ஆ)	மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஊடாக நிதியத்திற்கு பெறப்பட்டிருந்த மின்சாரம் மற்றும் நீருக்கான நியதியிலிருந்து செலுத்தப்பட வேண்டிய பெறுமதியை கணக்கிட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அதன் காரணமாக கணக்காண்டிக்குரிய அச் செலவுகளின் கணக்கு மற்றும் அட்டுறு செலவுகளின் கணக்கு குறைக்கப்பட்டிருந்தது.	சென்ற வருடத்தின் கணக்காய்வு அறிக்கை பிரகாரம் மின்சாரம் மற்றும் நீரை பெற்றுக் கொள்வதற்காக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு சரியான முறைமை ஒன்றை தயாரித்து தருமாறு மீண்டும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இதுவரை இந்த கொடுப்பனவுகளை மேற்கொள்வது தொடர்பாக சரியான முறைமை ஒன்றை தயாரித்திருக்கவில்லை என்பதன் மீண்டும் மோட்டார் வாகன போக்குவரத்து திணை களத்திற்கு திணைக்களத்துடன் கலந்துரையாடி கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.	ஆண்டிற்குரிய அனைத்து செலவவினங்களையும் சரியாகக் கண்டறிந்து நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல்.
(இ)	மீளாய்வாண்டினுள் நிதியத்தின் செயல்பாடுகளுக்காக மோட்டார் வாகன திணைக்களத்தின் நான்கு உத்தியோகத்தர்களை முழுநேர காலம் சேவையில் ஈடுபடுத்தியதுடன் அவர்களின் சேவைக்காக செலுத்தப்பட்ட ரூபா 3,648,181 ஆன சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் நிதியத்தின் செலவுகளாக கணக்கிடப்படாதிருந்ததன் காரணமாக வருடத்தின் மிகை அந்த அளவில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் நித்தியத்தின் செலவுகளாக கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆண்டிற்குரிய அனைத்து செலவினங்களும் முறையே இனங் காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல்
(ஈ)	2017 ஆம் வருடத்திலிருந்து 08 வருடங்கள் தொடற்ந்து முன் கொண்டு வரப்படுகின்ற தனியார் நிறுவனம் ஒன்றுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,096,875 ஆன தொகை ஒன்றை தீர்பனவு செய்யும் வல்லமையை கண்டறிந்து தேவையான கணக்கீட்டு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் இலங்கை போக்குவரத்து சபைக்கு புகை பரிசோதனை உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதற்காக தடுத்து வைக்கப்பட்ட ரூபா 1,096,875 ஆன தொகை அந்த தனியார் நிறுவனத்திற்கு செலுத்தாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது இந்த தொகையை விடுவிப்பதற்காக இலங்கை போக்குவரத்து சபையினால் அறிக்கை பெற்றுக் கொள்ளப்படும் வரை என்பதுடன் இது தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன்	அடுத்த ஆண்டில் செலுத்த வேண்டிய அடையாளம் காணக்கூடிய செலவுகளை மட்டும் கணக்கிட்டு, அத்தகைய ஏற்பாடுகள் ஏதேனும் இருந்தால், அவற்றை திரட்டப்பட்ட நிதியில் சரிசெய்தல்.

		எதிர்காலத்தில் குறித்த அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு அந்த தொகையை செலுத்தி நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வாகனங்களின் புகை பரிசோதனை நம்பிக்கை நிதியத்திலிருந்து வெளியேறி உள்ள ஊழியர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 17,807 ஆன அட்டுறு செலவுகள் கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(உ)	மிளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 171,437,319ஆன பெறுமதியான நாட்குறிப்புகள் 61 கு, அதிகாரம் அளிக்கப்பட்ட அங்கீகாரம் மற்றும் சான்றிதழ் படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் கையொப்பமிடப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், அந்த நாட் குறிப்புக்களுக்குரிய நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் மற்றும் உபகரணங்களின் ஆவணங்கள் பேணப்பட்டு இருக்கவில்லை.	சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆண்டுக்கான வருமானம் மற்றும் செலவுகளைத் துல்லியமாகக் கணக்கிடுதல், கணக்கிகிடுதளின் பிறகு நாட் குறிப்பின் ஊடாக மேற்கொள்ளப்படும் மாற்றங்களும் உறுதிச் சீட்டுக்கள் அங்கீகரிக்கப்படுவதற்கு சமமான அதிகாரிகளால் ஒப்புதல் மற்றம் சான்றிதழின் பேரில், மேற்கொள்ளப்படுகின்ற மற்றும் தொடர்புடைய துணை ஆவணங்களைப் பராமரித்தல்.
(ஊ)	அன்பளிப்பொன்றாக கிடைக்கப்பெற்றிருந்த 2014 ஜுன் 10ஆம் திகதியில் நிதியத்துக்கு உரிதைாதாக்கிபட்டிருந்த RANOMOTO வகையிலான மோட்டார் சைக்கிள் ஒண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	BAY-9100 ஆன மோட்டார் சைக்கிளை மீண்டும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதியத்திற்குச் சொந்தமான அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கிட்டு, அவற்றை நிதிக் கூற்றுக்களில் மூலம் வெளிப்படுத்துதல்.
(எ)	நிதிக் கூற்றுக்களில், நிலையான சொத்துக்களின் கீழ் தேறிய மதிப்பு பூச்சியமாக இருந்த 05 சொத்து வகைகளின், கிரயம் மற்றும் திரட்டப்பட்ட தேய்மானத்துடன் ரூபா 51,894,608 தொகை மிளாய்வாண்டின் சேர்க்கப்பட்டதுடன், அந்த தொகை உறுதிப்படுத்திக்கொல்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	புகை பரீட்சித்தல் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தேறிய மதிப்பு பூச்சியமாக இருந்த 05 சொத்து வகைகளின், உரிய கிரயம் மற்றும் திரட்டப்பட்ட தேய்மானத்துடன் சேர்க்கப்படுவதற் குரிய நிலையான சொத்து தேய்மானக் கோப்பை மீண்டும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக்குச் சொந்தமான நிலையான சொத்துக்களின் கிரயம் மற்றும் திரட்டப்பட்ட தேய்மானம், கணக்கிட்டு, அவற்றை நிதிக் கூற்றுக்களில் மூலம் வெளிப்படுத்துதல், மூல ஆவணங்கள் மற்றும் தொடர்புடைய பிற தகவல்களில் உறுதிப்படுத்தப்படுகிறது.

1.5.2 நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதி 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 மற்றும் 04 ஆம் பந்திகளின் பிரகாரம், 17/1615/702/002-xvii ஆம் அமைச்சரவை பத்திரம் மற்றும் 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி நடத்தப்பட்ட அமைச்சரவை கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டில் புகை பரீட்சிப்பு நிதியத்தினை கலைத்து பொறுப்புக்களை தீர்த்து முடிவுறுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், 2017 திசெம்பர் 10 ஆந் திகதி DMS/1143/VETF ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் ஊடாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் கீழ் ஒரு பிரிவாக நிறுவப்படவுள்ள முன்மொழியப்பட்ட புகை பரீட்சிப்பு செயற்திட்ட அலுவலகத்திற்காக 47 பணியாளர்களைக் கொண்ட பதவியணியினரை அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் கீழ் நிதிப் பிரமாணம் 876(2) மற்றும் (3) இன் பிரகாரம், சட்டப்பூர்வமற்ற நிதிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட வேண்டியதுடன், அவற்றின் பண மீதிகளை ஒருங்கிணைந்த நிதியில் செலவு வைக்கப்படுவதற்கும், சட்டப்பூர்வமற்ற நிதியமொன்றை தொடர்ந்து பராமரிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால், அத்தகைய நிதியங்கள் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்ட ஒரு வருடத்திற்குள் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டப்பூர்வமாக்கப்பட வேண்டும். 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 39(4), 2024 நவம்பர் 06 ஆந் திகதி 04/2024 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2025 ஏப்ரல் 11ஆம் திகதிய 1/2025 (நிதியம்) இலக்க சுற்று நிருப கடிதத்தின் பிரகாரம், சட்ட பூர்வமற்ற நிதியங்கள் 2025	இது தொடர்பாக இணக்கப்பாடு ஒன்றுக்கு முற்பட்டு மேலும் தொடர்ந்து நிதியத்தை பேணிச் செல்வதற்காக அமைச்சரவை யிடம் 2023.01.31 அமைச்சரவை பத்திரமொன்றை முன் வைப்பதற்கு போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் போது, நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் 2023.03.14 திகதிய பரிந்துரையை கருத்தில் கொண்டு 2023.03.20 அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மேலதிக செயலாளர் மட்டத்திலான 05 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு பரிந்துரைகளுக்காக முன்வைக்கப்பட்டுள்ளது. 2023.06.12 அன்று முன்வைக்கப்பட்ட விஞ்ஞாபனத்தின் ஊடாக நிதியத்தின் தொடர் தேவைப்பாடு தொடர்பாக விடையங்கள் முன்வைக்கப்பட்டு நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகள் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும் வரைவு அமைச்சு மற்றும் தொடர்புடைய அமைச்சு நிதியத்தின் தேவைபாட்டின் அடிப்படையில் தொடர்ந்து பேணி செல்வதற்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டு எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	குறித்த சுற்று நிருப ஏற்பாடுகள் மற்றும் அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் இந்த நிதியத்தை கலைத்து மூடுவதற்கு அல்லது மேலும் பேணிச் செல்வதற்கு சாதாரண காரணங்கள் இருப்பின் பாராளுமன்ற சட்டமொன்றின் ஊடாக சட்டமாக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

ஆகஸ்ட் 07 ஆம் திகதிக்கு முன்னர் கலைப்பதற்கு அல்லது தொடர்ந்து பேணிச் செல்வதற்கு தேவையேற்படின் திறைச்சேரியின் செயலாளரை கேட்டு நிதி அமைச்சருக்கு முன்வைக்கப்பட வேண்டும்.

2024 இன் 44 ஆம் அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் 2025 ஜனவரி 23ஆம் திகதி அரச நிதித் திணைக்களத்தின் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மற்றும் 2025 மார்ச் 25ஆம் திகதி அரச முதலீட்டு மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு குழு கூட்ட தீர்மானத்தின் பிரகாரமும் புகை பரிசோதனை நம்பிக்கை நிதியத்தினை கலைப்பதற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது.

புகை பரிசோதனை நிதியத்தை கலைப்பதற்காக மேற்குறித்த அமைச்சரவை அங்கீகாரம், சுற்று நிருப நடைமுறைகள் மற்றும் பரிந்துரைகள் வெளியிடப்பபடிருந்த போதிலும், 2018 ஆம் வருடத்தில் இருந்து இதுவரை 07 வருடங்கள் அண்மித்த காலம் ஒன்று கடந்திருந்த போதிலும் சட்டபூர்வமற்ற இந்த நிதியம் பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் சட்டமாக்குவதற்கு அல்லது அமைகச்சரவை அங்கீகாரத்துடன், நிதி அமைச்சு அல்லது திறைசேரி அங்கீகாரமும் இல்லாமல் வரைவு அமைச்சரின் மூலம் நிதியத்தின் பாதீட்டு அறிக்கை அங்கீகரிக்கப்பட்டு நிதியத்தை பேணி செல்வதற்கு நிதியத்தின் நம்பிக்கை சபை நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

முற்பணம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) பிரகாரம், யாதாயினுமொரு குறிப்பிடப்பட்ட பணிக்காக பதவி நிலை அலுவலர்களுக்கு மட்டுமே முற்பணம் வழங்கப்பட வேண்டுமாயினும் மீளாய்வாண்டில், 16 பதவி நிலை அல்லாத உத்தியோகத்தர்களுக்கு 147 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 5,617,720 பெறுமதியான உடனடி முற்பணம் வழங்கப்பட்டிருநு்தது.	நித்தியத்தின் முழு நேர பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் மாத்திரம் காணப்பட்டதுடன் பணிகளை நிறைவேற்றும் போது பிரச்சனைகள் ஏற்பட்டிருந்தது. அதனால் புகை பரிசோதனை நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த உத்தியோகத்தர்களுக்கு உடனடி முற்பணம் பணிக்காக துணை கட்டுநிதி விடுவிக்கப்பட்டுள்ளது. ஒரு சில	சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் உள்ளக கட்டுப்பாடு ஒன்றுக் காண தேவையான

அப்பணி முடிவடைந்தவுடன் முற்பணத்தை உடனடியாக மீள்நிரப்ப வேண்டுமாயினும், மீளாய்வாண்டில், பதவி நிலை அல்லாத மூன்று உத்தியோகத்தர்களுக்கு 03 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 120,000 தொகை மீள்நிரப்பப் பட்டிராதிருந்ததுடன், பதவி நிலை அல்லாத 14 உத்தியோகத்தர்களுக்கு 27 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 1,133,510 முற்பணத்தை மீள்நிரப்புவதற்காக 21 முதல் 91 நாட்கள் வரை சென்றிருந்தது.	நடைமுறை நிகழ்வுகள் காரணத்தின் அடிப்படையில் சிறிய தாமதங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் அவை அனைத்தையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளப்படுகின்ற முற்பனத் தொகையை விரைவாக செலுத்துவதற்கு மீண்டும் அறிவுரைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.	நடைமுறைகளை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	30/2016 ஆம் இலக்க 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 3.2	குழுமத்தின் வாகனங்களுக்காக 100 கிலோ மீட்டரை விட அதிகமான தூரம் கடமைக்காக பயணிக்கும் சந்தர்ப்பத்தில் வாகனத்தை பாவிப்பதற்காக அதிகாரம் பெற்ற உத்தியோகத்திற்கு முற்பணத் தொகையொன்று வழங்கப்பட்டு எரிபொருள் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு இருந்த போதிலும் வருட ஆரம்பத்தில் பதவி நிலை உத்தியோகத்தர் அல்லாத மேற்பார்வை உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 50,000 முற்பணம் ஒன்று வழங்கப்பட்டு அந்த உத்தியோகத்தரின் பெயரில் மீளாய்வாண்டில் நிதியத்துக்கு உரித்தான 03 வாகனங்களுக்காக ஒட்டு மொத்தம் ரூபா 991,154 சிடகைள்ட மீள் நிரப்பப்பட்டு எரிபொருள் நிரப்புதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	புகை பரிசீலனை மத்திய நிலைய பரிசோதனைகள் மற்றும் வாகன புகை பரிசீலனைகளை மேற்கொள்வதற்காக நாடு பூராகவும் பயணிப்பதற்கு ஏற்படுகின்றது. அதன் போது ஒரே தடவையில் எரிபொருள் தாங்கியை நிரப்பிய போதிலும் மேலதிக எரிபொருள்கள் தேவைப்படுகின்றது. பயணிக்கின்ற பொறுப்பான உத்தியோகத்தராக அடிக்கடி பெயரிடப்பட்டு அனுப்பப்படுகின்ற மோட்டார் வாகன பரிசோதனையாளரின் சேவையை பெற்றுக் கொள்வதுடன் எரிபொருள் மீள் நிரப்பும் பணிகள் நடைமுறைக்கு பொருத்தமில்லாத நிலையில் உள்ளதால் இந்த வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.	வாகனத்திற்காக எரிபொருள் நிரப்புதல் தொடர்பாக போதுமான அளவு உள்ளக கட்டுப்பாடு ஒன்றை பேணி செல்லுதல், எரிபொருளை நிரப்புவதற்காக முற்பணத் தொகை ஒன்றை வழங்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் சுற்று நிருப ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
(ஆ)	பீ.ஈ.டீ 3/2015 ஆம் இலக்க 2015 யூன் 17 ஆம் திகதிய	கட்டுப்பாட்டு சபைக்கு மற்றும் செயலாளர் பதவிக்கு கொடுப்பனவை மேற்கொள்வதற்கு இந்த	வாகன புகை பரிசோதனை நம்பிக்கை நிதியத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் நம்பிக்கை	சுற்று நிருப அல்லது ஏனைய சட்ட விதிகளின் மூலம் இந்த கொடுப்பனவுகள்

	திறைசேரி சுற்றறிக்கை	சுற்று நிறுபத்தின் சட்ட ஏற்பாடுகள் உள்ளடக்கப்படாத போதிலும், முறையான அங்கீகாரம் இல்லாமல் 2022 டிசம்பர் 21 ஆம் தேதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த நம்பிக்கை கபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நம்பிக்கை கபையின கூட்டத்திற்காக பங்கு பற்றுகின்ற கட்டுப்பாட்டு சபையின் ஒரு அங்கத்தவருக்கு ரூபா 12,500 வீதம் மற்றும் கூட்டத்தின் பணிகளை மேற்கொள்வதற்காக நம்பிக்கை சபையின் செயலாளர் பதவிக்காக ரூபா 6,000 வீதம் மீளாய்வாண்டில இடம் பெற்றிருந்த 03 கூட்டங்களுக்காக ரூபா 205,500 கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.	கபைக்கு உரித்தான அனைத்து கொடுப்பனவுகளையும் தீர்மானிப்பதற்கு மற்றும் மேற்கொள்வதற்கு அதிகாரம் உள்ளதுடன் அதன் அடிப்படையில் இந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மேலதிகமாக இது தொடர்பாக அப்போதைய நம்பிக்கை சபை, பொது முயற்சிகள் திணைக்களத்திடம் கோரப்பட்டதுடன், அந்த சந்தர்ப்பத்திலே பொது முயற்சிகள் திணைக்களமும் அறிவிக்கப்பட்டுள்ளதும், நம்பிக்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் நம்பிக்கை சபைக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அதிகாரம் உள்ளதாகவும். அதன் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	அங்கீகறிக்கப்பட்டிருப்பின், கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.
(இ)	DMA/2009/(2) ஆம் இலக்க 2009 செப்தெம்பர் 01 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை மற்றும் 502(2) நிதிப் பிரமாணம்	வருட இறுதி கணக்கு தினத்தில் புகை பரிசோதனை நிதியத்தின் பொருட்கள் மெய்மை ஆய்வு அறிக்கை பிரகாரம் சொத்துக்கள் தொகுதி 47 விற்கு உரிய சொத்துக்கள் அழகு 213 லிவ்யத்தின் இதயத்தில் உள்ள போதிலும் கணக்கிடப்பட்டிருந்த அனைத்து சொத்துக்களும் குறித்த மெய்மையாய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்ற தலைப்புக்கு போதுமான கணக்கிட்டு சாட்சிகள் சான்றுகள் பேணப்பட்டு இருக்கவில்லை.	வாகன புகை பரிசோதனை வேலை திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து 2024.12.31 ஆம் திகதி வரை கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் உபகரணங்களை பரிசீலனைகள் அறிக்கை புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேய்மானத்துக்கு உள்ளான சொத்துக்கள் நீக்கப்பட்டு 2024.12.31 ஆம் தேதி வரை உரிய சொத்துக்களின் கிரயம் நிதிக் கூற்றினுள் கணக்கிடப்பட்டுள்ளது. நிலையான சொத்துக்கள் பதிவேடொண்டு கணினி மாதிரி பத்திரம் ஒன்றின் பாவணையில் நிதியத்தின் ஆரம்பத்திலிருந்து பேணப்பட்டிருந்ததுடன்,	நிதிக்கூற்றின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்ற நிதியத்திற்குரிய நிலையான சொத்துகளின் பெறுமதிகள் மூலாதார பதிவேடு மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஊடாக உறுதிப்படுத்தக் கூடியவாறு தேவையான பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படுதல்.

			இதுவரை கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கவில்லை. எதிர்காலத்தில் அரசின் மாதிரியின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேறொன்று பேணப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	
(ஈ)	01/2020 ஆம் இலக்க 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 8 பந்தி மற்றும் 753(2) நிதிப் பிரமாணம்	நிதியத்தினால் கூட்டு மொத்தம் ரூபா 114,237,646 ஆன நடைமுறை அல்லாத சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் உள்ளடங்களாக கிளை அலுவலகங்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பவுதிக ரீதியாக சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த சுற்றறிக்கையின ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த சொத்துக்கள் சட்ட ரீதியாக சுவீகரிக்கப் பட்டிருக்கவில்லை. அத்தோடு இந்த சொத்துக்கள் சரியாக பௌதீக ரீதியாக சுவீகரிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நிதி பிரமாணத்தின் பிரகாரம் அந்த நிறுவனத்தினால் 219 ஆவது பொது மாதிரிகளின் கிடைப்பனவு கட்டளையோன்றோ பெற்றிருக்கவில்லை.	2020 ஆகஸ்ட் 28ஆம் தேதி 2020/01 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த சொத்துக்களை சுவீகரிக்கப்பதற்கும், நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உரிய நிறுவனங்களினால் 219 ஆவது பொது மாதிரியை பெற்று கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்காக குறித்த நிறுவனங்கள் பாவனைக்கு உட்படுத்தும் மாதிரியின் மூலம் கிடைப்பளவு கட்டளை கிடைக்க பெற்றிருந்ததுடன் அரச சாதாரண முறையன் கீழ் விநியோகிக்கும் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது.	வேறு நிறுவனங்களுக்கு பொறுப்பு அளிக்கப்பட்டுள்ள நிலையான பத்துக்கள், உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கிடைப்பணவு கட்டளை கிடைக்கப்பெற்றதன் பின்னர் புத்தகங்களில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
(உ)	நிதிப்பிரமாணம் 1645 (அ)	ஒவ்வொரு வாகனத்துக்காகவும் வாகன லொக் புத்தகமென்று நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட்டு இருக்க வேண்டிய போதிலும், வாகனம் தொடர்பான	தற்போது அனைத்து தகவல்களும் நாளது வரையாக்கப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படல், வாகன லொக் புத்தகங்களில் அனைத்து தகவல்களையும் உள்ளடக்கி நாளது வரை ஆக்கப்படுதல் வேண்டும்.

விபரம், எரியும் எரிபொருள் அளவு, சர்வீஸ் செய்தல், ஓட்டம் தொடர்பான மாதாந்த சாராம்சம் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டு வாகன லொக் புத்தகம் நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 376,081,255 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 334,633,332 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 41,447,923 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன் இந்த வளர்ச்சிக்கு மீளாய்வாண்டின் வருமானம் அதிகரித்தமை பிரதானமாக காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஒரு பதவிக்குரிய ஒப்பந்தம் இடப்பட்ட சம்பளத்தின் அடிப்படையில் அந்த பதவிக்குரிய வேலை விபரம் உள்ளடக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் அந்த பணிகளுக்காக மேலதிக கொடுப்பனவொன்று உரித்தாகாது. இருப்பினும் வேலை விபரத்தில் புகை பரிசோதனை வேலை திட்டத்தை நடைமுறைப்படுத்தல், அறிவுறுத்தும் வேலை திட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்ற புகை பரிசோதனைக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்க்கப்பட்டுள்ள செயற்திட்ட உதவியாளர், பரிசீலனை உதவியாளர் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர் 11 பேருக்காக வேலை விபரத்தின் அடிப்படையில் அவர்கள் நிறைவேற்ற வேண்டிய பணிகளான புகை பரிசோதனை வேலை திட்டத்திற்காக பங்குபடுத்துவதற்காக நிதி அமைச்சின் அங்கீகாரமின்றி நம்பிக்கை சபையின் அனுமதியின் அடிப்படையில் மாத்திரம் நிதியத்தின் செயற்திட்ட உதவியாளர், பரிசோதனை உதவியாளர் உத்தியோகத்தர்களுக்கு ஒரு நாளைக்கு ரூபா 2,000 வீதம் மற்றும் தொழில்நுட்ப வல்லுனருக்கு ஒரு நாளைக்கு ரூபா 1,500 வீதம் மீளாய்வாண்டினுள் பங்கு பெற்றதற்காக	வாகன புகை பரிசோதனை நம்பிக்கை நிதியத்தின் அலுவலகத்தின் ஊடாக இந்த வாகன பரிசோதனை மத்திய நிலைய மேற்பார்வை மாதிரி புகை பரிசோதனை நடவடிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல் மேற்கொள்ளும் வேலை திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது காணப்படுகின்ற உத்தியோகத்தர்கள் தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்களாக ஆட்சியர்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. புகை பரிசோதனை மத்திய நிலைய மேற்பார்வை மாதிரி புகை பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டு தயாரிக்கப்பட்டு அனைத்து அறிக்கைகளும் கிடைக்கப்பெறுவது இந்த உத்தியோகத்தர்களின் மூலமே ஆகும். இந்த உத்தியோகத்தர்கள் தனது நாளாந்த பணிகளுக்கு அப்பால் சென்று கடமைகளை மேற்கொள்கின்றனர். இந்த நிலைமையினுள் ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாக பிரச்சனைக்குரிய நிலைமை ஒனறு ஏற்றுள்ளதுடன் மேலதிக பணிகளை மேற்கொள்வதற்கு மற்றும் இந்த	முறையான அங்கீகாரம் ஒன்றின் அடிப்படையில் செலவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

கொடுப்பனவு என்ற பெயரில் கூட்டு மொத்தம் ரூபா 934,500 செலுத்தப்பட்டிருந்தது.	பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு வேண்டிய தைரியம் ஊட்டல் அடிப்படையில் இந்த கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. நம்பிக்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தேவையான பணியாளர்களை நியமித்தல் மற்றும் கொடுப்பணவுகளை செலுத்துவதற்கு நம்பிக்கை சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	

(ஆ)	நிதி அமைச்சு அல்லது தொடர்புடைய சம்பள அதிகார நிறுவன வியூகங்களின் அங்கீகாரம் இன்றி 2022 திசெம்பர் 21 பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2022/04 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் புகை பரிசோதனை வேலை திட்டத்திற்காக பங்குபடுத்துகின்ற மத்திய சுற்றாடல் அதிகாரசபை உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப வித்யாலயத்தின் உத்தியோகத்தர்கள் போன்ற வெளி அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தலா ரூபா 2,000 வீதம் படியும், போலீஸ் உத்தியோகத்தர்களுக்கு ஒரு நாளைக்கு ரூபா 1,500 மும், க்ளீன்கோ லங்கா மற்றும் லாப் எகோ ஸ்ரீ தனியார் கம்பனிகளின் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு ஒரு நாளைக்கு ரூபா 1,000 மும், மீளாய்வாண்டில் கூட்டு மொத்தம் ரூபா 2,246,200 பங்கு பற்றுதலுக்கான கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.	நம்பிக்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் தேவையான பதவியணியினர்களை நியமித்தல் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு நம்பிக்கை சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட மட்டத்தில் இந்த பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு போதுமான அளவு பதவியணியினர் இல்லாததுடன் மாவட்ட மட்டத்தில் சிதறி உள்ள சுற்றாடல் உத்தியோகத்தர்களை ஒன்று சேர்த்து இந்த வேலை திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதனால் சென்ற வருடத்தில் 10,000 வாகனங்கள் அளவில் மாதிரி புகை பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு முடியுமா இருந்தது. மேலும் மாவட்ட மட்டத்தில் இந்த வேலைதிட்டத்தை விரிவு படுத்துவதற்கு முடியுமாகி இருந்தது. மேலும் அனைத்து தரப்பினர்களையும் தொடர்புப்படுத்துதல் ஊடாக வேலைத்திட்டம் தொடர்பான பரந்த பிரசாதம் ஒன்றை சமூக மட்டத்தில் ஏற்பட்டது.	முறையான அங்கீகாரம் ஒன்றின் அடிப்படையில் செலவுகள் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(இ) மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் பிரிவொன்றாக நிறுவுவதற்கு முன்மொழியப்பட்ட புகை பரிசோதனை செயற்த்திட்ட அலுவலகத்துக்காக 2017 டிசம்பர் 10 ஆம் திகதிய DMS/1143/VETF ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் கடிதத்தின் ஊடாக 12 பதவி பெயர்களின் கீழ் 47 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டு அந்த பதவிகளுக்காக ஆத்தேர்ப்பு மேற்கொள்வதற்கு மற்றும் இணைத்துக் கொளவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர் நடைமுறை மற்றும் சேவை விதிமுறைகளுக்கு இணங்க முறையாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் புகை பரிசோதனை நிதியத்தின் கீழ் பதவி அணியினர் பதவிகள் அங்கீகரித்தல் நேர்ந்திருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
(i)	நிதியத்தின் கீழ் பதவிகளுக்காக சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் ஒன்று இல்லாத நிலையில்,	பதவி அணியினர்களுக்கான பதவி பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவை திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும்	தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், நிதிப் பிரமாணங்கள்

	மற்றும் முறையான சேவை விதிமுறைகள்/ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று அற்ற நிலையில் பிரிவொன்றாக நிறுவுவதற்கு முன்மொழியப்பட்ட புகை பரிசோதனை செயற்திட்ட அலுவலகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளிலிருந்தும் விலகி வேறு பதவிகளும் உள்ளடக்கப்பட்டு மீளாய்வாண்டினுள் நிதியத்தின் கீழ் 24 பதவிகளுக்கு கூட்டு டுமொத்தம் ரூபா 14,925,950 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது.	10MT/02/01/01/02/11/II ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி செயற்திட்ட அலுவலகத்தின் செலவுகள் நிதியத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் நிதியம் தொடர்பான கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்றை பெற்றுக் கொள்ளும் வரை மேற்குரித்த உள்வாங்களை மேற்கொள்ள முடியாது என்பதாக முகாமைத்துவ தேவை திணைக்களத்துடன் 2022.01.23 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அறிவிக்கப்பட்டிருந்தது. புகை பரிசோதனை நிதியத்தை கலைப்பது அல்லது தொடர்பாக இதுவரை இறுதி முடிவு ஒன்றுக்கு எட்டியிருக்கவில்லை என்பதுடன் அதற்காக குறித்த நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதுடன் இந்த காரியாலயத்தின் ஊடாக புகை பரிசோதனை வேலைத் திட்டத்தின் ஒழுங்குமுறை செயல்பாடு பணிகளை மேற்கொள்வதற்காக தனியாக உள்ள ஒரே ஒரு நிறுவனம் இது என்பதுடன் வாகன புகை பரிசோதனை செயல் திட்ட அலுவலகத்தின் பணிகள் ஏனைய சாதாரண அரச சேவையின் பணிகளிலும் மிகவும் விசேடமான தகைமைகள் உள்ள பதவி அணியினர்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்காக பதவியணியினர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்காகவும் உள்வாங்கப்பட்டிருந்தனர்.	மற்றும் முகாமைத்துவ சேவை சுற்று நிருப ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக மாத்திரம் முறையான சேவை விதிமுறைகள்/ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றின் கீழ் உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கப்பட வேண்டியதுடன், அந்த பதவிகளுக்காக மாத்திரம் சம்பளம் கொடுப்பனவுகள் செலுத்த நடவடிக்கை எடுத்தல்.
(ii)	முறையான நியமன அதிகாரியின் அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டினுள் புகை பரிசோதனை நிதியத்தின் 04 பதில் கடமை பதவிகளுக்காக 04 உத்தியோகத்தர்களுக்கு கூட்டு மொத்தம் ரூபா 1,775,875 தொகையான பதில் கடமை படிகள், போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் தொலைதொடர்பு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன், புகை பரிசோதனை பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர்களிலிருந்தும் வெளிவாரி 03 பதவிகளுக்காக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பதவி யிணியில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் மூவருக்கு மீளாய்ண்டினுள் கூட்டு மொத்தம் ரூபா 902,622 பதில் கடமை சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.	புகை பரிசோதனை நிதியம், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்துக்கு இணைப்பாக நிறுவப்பட்டுள்ளது. அதன் நிர்வாக நடவடிக்கைகளுக்காக அமைச்சின் 03 செயலாளர்களில் உள்ளடங்கிய நம்பிக்கை சபை ஒன்று உள்ளது. தற்போது அந்த அலுவலகத்தில் எந்த ஒரு பதவி நிலை உத்தியோகத்தர்கள் இல்லாததன் காரணமாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உத்தியோகத்தர் களினால் பதில் கடமை மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் அந்த பதில் கடமைகளுக்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரின் பரிந்துரைகள் உள்ளன.	யாதேனும் ஒரு உத்தியோகத்தருக்கு பதில் கடமை சம்பளம் ஒன்று செலுத்துவதற்கு குறித்த உத்தியோகத்தரின் நியமன அதிகாரியினால் அந்த பதில் கடமை பதவிக்காக நியமிக்கப்பட்டிருத்தல்.

		படிகளை செலுத்துவதற்காக தேவையான சட்ட ரீதியான அதிகாரங்கள் புகை பரிசோதனை நம்பிக்கை சபைக்கு காணப்படுகின்றது.	
(iii)	2017 டிசம்பர் 10ஆம் திகதிய DMS/1143/VETF ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் கடிதத்தின் ஊடாக புகை பரிசோதனை பிரிவுக்காக அங்கீகரிக்கப்பட்ட பணிப்பாளர் பதவி இலங்கை பொறியியலாளர் சேவையின் I ஆம் தரத்திலான பதவி ஒன்றான இருப்பினும் அதற்கு தகுதியான உத்தியோகத்தொருவரை இணைத்துக்கொள்ளாமல் மேற்குறித்த இ(ii) இன் உள்ளடக்கப்பட்ட பதில் கடமை பதவி ஒன்றான பணிப்பாளர் பதவிக்கு உள்வாங்கும் நோக்கில் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திலான உத்தியோகத்தரொருவரை ஆட் சேர்த்து அந்த உத்தியோகத்தருக்கு இலங்கை பொறியியலாளர் சேவையின் I ஆம் தரத்திலான பதவிக்குரிய ஒட்டுமொத்தம் ரூபா 113,280 பதில் கடமை சம்பளம் மற்றும் III ஆம் தரத்திலான உத்தியோகத்தரொருவருக்கு உரித்தல்லாத ரூபா 1,162,410 எரிபொருள் மற்றும் போக்குவரத்து படிகள் செலுத்தப்பட்டிருந்தது.	வெற்றிடமாக உள்ள பணிப்பாளர் பதவிக்காக 2018 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஒவ்வொரு வருடமும் பொது நிர்வாக அமைச்சின் ஊடாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் செயற்திட்ட அலுவலகம் மேற்குறித்த பதவி முழுமையான அரச சேவைக்கு உள்வாங்கப்படாமையினால் நேரடியாக அரச சேவையில் உள்ள உத்தியோகத்திற்கு இந்த பதவிக்காக உள்வர முடியாது. அதற்கு பதிலாக இரண்டாம் நிலை அல்லது பகுதி நேர பதில் கடமையின் அடிப்படையில் மாத்திரம் உள்ளிருக்க முடியும். அதனால் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் முழு நேர சேவையில் ஈடுபட்டுள்ள பொறியியலாளர் சேவையின் 2 ஆம் தரத்திலான உத்தியோகத்தர் ஒருவர் நம்பிக்கை ஏற்பாட்டின் பிரகாரம் நம்பிக்கை சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளது. அதற்காக ஆணையாளர் நாயகத்தின் பரிந்துரை, போக்குவரத்து செயலாளரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அமைச்சின் செயலாளரும் அங்கத்தவராக உள்ள நம்பிக்கை சபையினால் முறையாக நியமிக்கப்பட்டு குறித்த கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளது.	பதில் கடமை பதவிக்காக நியமித்தல் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துதல் என்பன தாபன கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இடம் பெறுதல்.
(ஈ)	நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வருட இறுதிப்பகுதியில் திரண்டுள்ள வருட இறுதி இலாபம் ரூபா 983.002 மில்லியன் காணப்பட்ட போதிலும் அந்த திரண்ட இலாபத்தை ஒன்றிணைந்த நிதியத்துக்கு செலவு வைக்கப்படாமல் நிலையான வைப்பு மற்றும் சேமிப்பு வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.	வாகன புகை பரிசோதனை நம்பிக்கை நிதியம் நிறுவப்பட்டிருப்பது ஒட்டுமொத்த வளி மாசுபடுதலை இழிவு மட்டத்துக்கு கொண்டு வரும் நோக்கிலாகும். நம்பிக்கை ஒப்பந்தத்தில் நிதியத்தை சேகரித்தல் மற்றும் செலவு செய்தல் காணப்படுகின்றது. அதன் பிரகாரம் நிதியம் ஒன்றிணைந்த நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதற்கு இல்லாதவுடன், புகை பரிசோதனை நடவடிக்கைகள் தொடர்பான சேகரிப்பொன்றாகும். மிகை பணம் ஒன்றிணைந்த நிதியத்துக்கு பெற்றுக்கொடுத்தல் அவசியமில்லை என்பதுடன் முதலீடு செய்வதற்கு ஏற்பாடுகள் உள்ளன. இருப்பினும் நிதியத்தின் மிகை பணம், அரச நிதித் திணைக்களத்தின் வேண்டுகோளின்	மிகை பணம் திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் முதலீடு செய்தல் அல்லது அரச நிதி முறையாக ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

பிரகாரம் நம்பிக்கை சபையின் அங்கீகாரத்தின் கீழ் மாத்திரம் ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகிறது.

3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
புகை பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்ற தனியார் கம்பெனிகள் இரண்டுடனும் ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு வாகனத்துக்காகவும் அறவிடப்படுகின்ற பரிசோதனை கட்டணத்திலிருந்து நூற்றுக்கு 10 ஐ புகை பரிசோதனை நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டும். இருப்பினும் இந்த தனியார் கம்பெனிகள் மேற்கொள்கின்ற புகை பரிசோதனைகளின் எண்ணிக்கை, அதற்காக அவர்கள் அறவிட்டுக் கொள்கின்ற பரிசோதனை கட்டணம் மற்றும் அதன் பிரகாரம் புகை பரிசோதனை நிதியத்துக்கு கிடைக்கப்பெற வேண்டிய வருமானங்கள் தொடர்பாக பரிசீலனை மேற்கொள்வதற்கு போதியளவு தரவுகளை பெற்றுக் கொள்ளும் நடைமுறையொன்று தொடர்பான ஒப்பந்தமாக்கப்பட்ட இணக்கப்பாடு ஒன்று இல்லாமல் அந்த தனியார் கம்பெனிகளுடன் பெறப்படுகின்ற தகவல்களின் அடிப்படையில் ரூபா 363.85 மில்லியன் நிதியத்தின் வருமானங்களாக அடையாளம் காணப்பட்டிருந்தது. இதன் காரணமாக புகை பரிசீலனை மூலம் அரசுக்கு கிடைக்கப்பெற வேண்டிய அனைத்து வருமானங்களும் முறையாக கிடைக்கப்பெற்றதா, கிடைக்கப்பெற வேண்டிய வருமானங்கள் எவ்வளவு என்பது சரியாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் மேற்குறித்த தனியார் கம்பெனிகள் அனுப்பப்பட்ட வருமானங்கள் நிதியத்தின் உண்மையான வருமானம் என்பதாக கணக்கிடப்பட்டிருந்தது.	இந்த புகை பரிசோதனை வேலை திட்டம் Built own operate நடைமுறையின் கீழ் டெண்டர் மேற்கொள்ளுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கிரயம் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் சம்பந்தமாக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவது ஒப்பந்த நிறுவனங்கள் இரண்டின் ஊடாக என்பதுடன் அரசினால் எவ்வித செலவையும் தாங்கிக் கொள்வதில்லை. அதன் பிரகாரம் அவர்களினால் புகை பரிசோதனை தரவு களஞ்சியம் பேணப்பட்டு வருகின்றது. புகை பரிசோதனை தரவு வருமானங்கள் அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக மத்திய தரவு களஞ்சியம் ஒன்றான ICTA தரவு களஞ்சியத்துக்கு ஒப்பந்த நிறுவனத்தின் ஊடாக புகை பரிசோதனை தரவுகள் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம் புகை பரிசோதனை நடைமுறையின் அனைத்து செயற்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவது ஒப்பந்த நிறுவனத்தின் ஊடாக என்பதுடன் இந்த நடைமுறையை மேட்பார்வை செய்வதற்காக எங்களுக்கு வசதிகள் செய்து தரப்பட்டு ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஒப்பந்த நிறுவனங்கள் இரண்டினதும் தரவு கட்டமைப்பிக்கு உட்பிரவேசித்து புகை பரிசோதனை தரவுகளை அவதானிப்பதற்கு எங்களுக்கு வசதிகள் பெற்று தரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எங்களினால் இந்த தரவு கட்டமைப்பிற்கு உட்சென்று மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிகின்றது.	வருமானத்தை நிச்சயத்து அடையாளப்படுத்தி கணக்கீடு மேற்கொள்ளுதல்.

3.3 செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
வளியின் நிலைமையை முகாமைத்துவம் செய்வதற்காக தேவையான தரவுகளை பெற்றுக் கொள்வதற்கு மற்றும் அவற்றை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்துவதற்காக புகை பரிசோதனை நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 82,752,000 கிரயமான வளி நிலைமையை அளவிடும் 02 உபகரணங்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு மற்றும் ஒட்டுமொத்தம் கிரயம் ரூபா 78,068,892 ஆன நடமாடும் வளி நிலைமையை அளவிடும் 02 உபரணங்கள் கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. அந்த தரவுகள் பயன்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக நிதியத்திடம் முன் நிச்சயிக்கப்பட்ட வேலை திட்டம் ஒன்று இல்லாமை, இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ள சுற்று வட்டாரத்தில் வளி நிலைமையின் தரத்தின் நிலைமையை மாத்திரம் அளவிடக்கூடியமை, அவ்வாறான தரவுகளை பயன்படுத்தி ஒட்டுமொத்த வளி நிலைமையை முகாமைத்துவம் செய்வதன் மூலம் எவ்வித பயன்பாடுடைய பணிகளையும் நிதியத்தினால் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக ரூபா 160 மில்லியனுக்கு அதிகமான அரசின் பணம் செலவிடப்பட்டு இந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதன் மூலமாக கிடைக்கப்பெற்றுள்ள அளவீட்டு தரவுகள் விளைவற்றதாக அவதானிக்கப்பட்டது.	புகை பரிசோதனை நம்பிக்கை நிதியத்துக்கு நிறுவப்பட்டிருப்பது வளி மாசுபடுதலை இழிவு நிலைக்கு கொண்டு வருவதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விஞ்ஞான ரீதியான வளியின் நிலைமையை அளவிடும் உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கு மற்றும் அவற்றை **** அரசுக்கு மேலதிக கிரயம் ஒன்றை தாங்கிக் கொள்ளாமல் இந்த் நிதியத்தின் ஊடாக நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல் இடம்பெறுகின்றது. அதன் பிரகாரம் வளியில் நிலைமை தொடர்பாக சரியான கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு முற்படுவதற்காக வளியின் தரம் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு மற்றும் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், நிதியத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள உபகரணங்கள் மற்றும் ஏனைய தொழில்நுட்ப முறைகளின் ஊடாக அளவிடப்படுகின்ற அனைத்து வளியின் தர தரவுகளும், அந்த தரவுகள் தொடர்பாக அக்கறை காட்டுபவர்களின் தரப்பினர்களுக்கு பெற்றுக் கொள்வதற்காகவும் பொது மக்களுக்கு காட்சிப்படுத்துவதற் காகவும் தேவையான மென்பொருள்கள் தற்போது உரிய இரண்டு நிறுவனங்களினாலும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், AIR QUALITY INDEX ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதுடன் சுற்று வட்டாரத்தின் வளி நிலைமையின் தரத்தின் தன்மை அதனூடாக காட்சிப்படுத்தப்படு கின்றது. மேலும், இந்த அலகின் ஊடாக பெற்றுக்கொள்ளப்படுகின்ற தரவுகள், அந்த தரவுகள் தொடர்பாக அக்கறை காட்டுகின்ற தரப்பினருக்கு பெற்றுக் கொள்வதற்காகவும், பொது மக்களுக்கு காட்சிப்படுத்துவதற் காகவும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மற்றும் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சிகள் நிறுவனத்தின் வலைத்தளங்களிலும் காட்டப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இந்த தரவுகள் சுற்றாடல் அமைச்சின் வளி	சொத்துக்களை விளைவற்ற நிலையில் அல்லாமல் உபயோகப்படுத்திக் கொள்ளல்.

நிலைமைகள் முகாமைத்துவ கேந்திர நிலையத்தின் ஊடாகவும் வளி நிலைமையை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக தொடர்பான கொள்கைகள், தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகளை அடையாளப்படுத்துவதற்காகவும் பயன்படித்திக் கொள்வதற்கு முன்வைக்கப்பட்டுள்ளதாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.